


பாவை பப்ளிகேஷன்ஸ்
# 16 (142) ஜானி ஜான்கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 044 - 28482441, 42155309.
e-mail : pavai123@yahoo.com

ISBN 817735850-2


Code No : P 1392
Rs : 900/-


இலக்கியப் பதிவுகளில் மதுரை (தொகுதி-2)

(Imprints of Madurai in Literature)

# இலக்கியப் பதிவுகளில் மதுரை

## ஆலவாய் (தொகுதி - 2)





வெளியீடு:
தமிழ்த்துறை
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)
மதுரை-625 002.

# மதுரையில் அன்னை ரோஸின் கல்விப்பணி

*முனைவர் ஆ. பாப்பிகமலாபாய்,*
இணைப் பேராசிரியர்,
பாத்திமாக் கல்லூரி,
மதுரை.

மதுரை மாநகரம் கூடல் எனும் பெயரால் வழங்கப்பட்டது. தூங்கா நகரம் எனும் சிறப்புப் பெயரைப் பெற்ற இந்நகரம் கோயில்களால் சிறப்படைந்த ஒன்று. தமிழ் வளர்த்த பெருமை மதுரைக்கும் உண்டு. புலவர்களால் பாடப்பெற்ற சிறப்பும், கல்வியால் ஓங்கிய அறிவும், பிறநாட்டினரால் விரும்பப்படும் கலைகளும் நிறைந்ததுதான் மதுரை. இம் மதுரையில் தொண்டு செய்து பெண்கல்வியை வளர்த்து பாத்திமாக் கல்லூரியை உருவாக்கிப் பெண் அடிமையைப் போக்கிய மேலை நாட்டு அம்மையார் அன்னை ரோஸ் ஆவார். அன்னாரின் பணியை விளக்குவதாக இக் கட்டுரை அமைகிறது.

### பெண்ணின் ஆற்றல்

'பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்' என்றார் பாரதியார்.
அதே வரிசையில்
கல்வியில்லாத பெண்கள்
களர்நிலம் அந்நிலத்தில்
புல் விளைந்திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைவதில்லை
என முழங்கினார் பாரதிதாசன்.

ஆம் கல்வி என்பது பொதுவான ஒன்று. அது நாட்டினுடைய பொதுவுடைமைச்சொத்து ஆணும் பெண்ணும் சமத்துவமாக வாழவேண்டுமெனில்,



எட்டும் அறிவினில்
ஆணுக்கு இங்கே பெண்
இளைப்பில்லை காண்' எனவும்
'பட்டங்கள் ஆள்வதும்
சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்'

எனவும், நாடு விடுதலையடையும் முன்னரே பெண்ணினத்தின் கல்விக்காகப் பாரதியார் குரல் எழுப்பினார் .

### பெண்ணினத்தின் விடுதலை

சமுதாய நலனில் அக்கறையும், சமூகப் பொறுப்புணர்வும் கொண்ட எந்த மனித உயிரின் இறுதி இலக்கும் மானுட விடுதலை நோக்கியதாகவே அமையும், காலம் காலமாக இனம், சாதி போன்ற மேலாதிக்க உணர்வுகளால் நசுக்கப்பட்டுத் தலைமுறை தலைமுறையாகத் தாழ்த்தப்பட்டவர்கள் வரிசையிலிருப்பவர்களில், பெண்களும் உண்டு. பெண்ணறிவு என்பது 'பேதமைத்தே' எனவும் 'தையல் சொல்கேளேல்' எனவும் முதுமொழிகள் வழங்கின. தனி மனிதத்தகுதி மறுக்கப்பட்டு, கைவிடப்பட்ட பெண்களின் விடுதலைக்காக சிந்திப்பதும், குரல்கொடுப்பதும் மனிதத்தின் விடுதலையாகும்.

### பெண்களும் பேராற்றல்களும்

அதியமான் அரசுக்காக தூதுவரானார் ஔவையார். அறநெறியை அரசுக்குக் கற்பித்தாள் கண்ணகி. நாட்டுமக்கள் பசிப்போக்கும்படி பொதுத்தொண்டாற்றினாள் மணிமேகலை. ஆண்கள் மருத்துவம் பயின்ற காலத்தில் ஒரு பெண் துணிந்து மருத்துவம் பயின்றதும் தேவதாசி அமைப்பினை மாற்றி, சட்டமேலவை உறுப்பினராக இருந்து புற்றுநோய் ஆய்வுக்கழகத்தை நிறுவி பெண்ணினத்திற்கே பெருமை சேர்த்தவர் முத்துலெட்சுமி அம்மையார்.

ஒரு பெண் பிரதமராகத் தொடர்ந்து பணிசெய்ய முடியும் எனச் சாதித்தார் இந்திராகாந்தி அம்மையார். இந்திய எழை மக்கள், மற்றும் தொழுநோயாளிகளிடம் இரக்கம் காட்டி தொண்டுகள் பலவும் செய்தவர் வெளிநாட்டு அம்மையார் அன்னைதெரசா. அதே வரிசையில் தமிழ்நாட்டிலுள்ள மதுரையைத் தன் பணியிடமாகக் கொண்டு பெண்கல்விக்காகத் தன் உயிரையே மெழுகுவர்த்தியாகக் கரைத்தவர் அன்னை ரோஸ்.